# ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு முயற்சிகள் -ஓர் ஆய்வு

கலாநிதி. கி.விசாகரூபன்

### 1.0 தோற்றுவாய்

நாட்டார் வழக்காற்றியல் இன்று அனைத்துலகக் கல்விப்புலமாக (International Discipline) வளர்ந்து வருகின்றது. அதனுடைய தாக்கங்கள், செல்வாக்குகள் ஈழத்திலும் உணரப்பட்டுள்ளன. நாட்டார் வழக்காற்றியல் குறித்த இவ்வாய்வானது. நாட்டார் வழக்காற்றியல் என்ற ஆய்வறிவுத்துறை ஈழத்தில் அறிமுகமான காலம் முதல் இன்றைய காலம் வரை அதன்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் பற்றி நோக்குவதாக அமைகின்றது. ஆய்வின் பிரதான திருப்பங்கள் பற்றியும், அத்திருப்பங்களுக்கு காலாய் அமைந்த ஆய்வுகள் பற்றியுமே இவ்வாய்வு கவனம் செலுத்தும். 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற சொற்றொடர் குறிக்கும் விடயம் பற்றிய தெளிவு இவ்விடத்தில் அவசிய மாகின்றது.

### 2.0 நாட்டார் வழக்காற்றியல்-சுருக்க அறிமுகம்.

'நாட்டார் வழக்காற்றியல்' என்றால் என்ன என்பது குறித்து அறிஞர்கள் பலரும் அதன் புறப்பண்புகளை (External Criteria) வைத்து வரையறுக்க முற்பட்டுள்ளனர். (1) இத்தகைய வரையறுப்புக்களில் குறைபாடுகள் பல காணப்பட்டாலும் 'டண்டிஸ்' என்ற அறிஞர் தரும் நாட்டார் வழக்காற்று வடிவங்கள் பற்றிய பட்டியல் இப்புலமைத்துறையுள் உள்ளடங்கும் விடயங்கள் பற்றி ஓரளவு தெளிவுறுத்துவதாக அமைகிறது. பட்டியல் வருமாறு.

'புராணக்கதைகள், பழமரபுக்கதைகள், நாட்டார் கதைகள், நகைப்புக்கள், பழமொழிகள், விடுகதைகள், இன்னிசை உச்சாடனங்கள், மந்திரங்கள், வாழ்த்துக்கள், சாபங்கள், சபதங்கள், வசவுகள், எதிருரைகள், இடித்துரைகள், நையாண்டிகள், பாராட்டுக்கள், நாப்புரட்டுக்கள், வரவேற்புரைகள், விடைபெறும் வாய்பாடுகள், நாட்டார் ஆடைகள், நாட்டார் நடனம், நாட்டார் நாடகம், நாட்டார் கலை, நாட்டார் நம்பிக்கை, நாட்டார் மருத்துவம், நாட்டார் இசைக்கருவிகளின் வழி இசை, நாட்டார் பாடல்கள், நாட்டார் பேச்சு, நாட்டார் உவமைகள், நாட்டார் உருவகங்கள், பெயர்கள் (பட்டப்பெயர், இடப்பெயர்), (2) இவற்றுடன் விளையாட்டுக்கள், சைகைகள், குறியீடுகள், செபங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், மெத்தை உருவரைகள் (Designs) பின்னல் உருவகைள், வீடுகள், களஞ்சியங்கள், வேலிகளின் வகைகள், கூவி விற்போர் குரலொலிகள், விலங்குகளை அழைப்பதற்கு அல்லது கட்டளையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மரபொலிகள் முதலானவை நாட்டார் வழக்காற்றியல் பட்டியலுக்குள் அடங்குவனவாகும்.

மேலே சுட்டிய பட்டியலுள் அனைத்து வழக்காறுகளும் உள்ளடங்கியுள்ளதாகக் கருதமுடியாது. இந்த வழக்காறுகளும் இவைபற்றிய கல்வியும் 'நாட்டார் வழக்காற்றியல்' எனப்படும்.

### 3.0 ஈழத்தில் நாட்டார் வழக்கியல் ஆய்வுகள்: வகையும் பண்பும்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பின்னரைக் கூறுவரை மானிடவியலின் ஒரு பகுதியாக இருந்து வந்த நாட்டார் வழக்காற்றியல், 19ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் தனித்த ஒரு ஆய்வுத்துறையாக சர்வதேசமட்டத்தில் வளர்ச்சி கண்டது. சமூக மாற்றங்கள் பலவற்றைச் சந்தித்த இக்காலப்பகுதி இதற்கான வாய்ப்பான சூழலமைவுகளை ஏற்படுத்தியது. சர்வதேச மட்டத்திலா

னதாக்கங்கள், செல்வாக்குகள் முதலியன காரணமாக ஈழத்திலும் இத்துறை குறித்த ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின.

### 3.1 பிரக்ஞை பூர்வமற்ற தனிநபர் நிலைப்பட்ட ஆய்வுகள்

மேலே குறித்த வகையிலான ஆய்வுகளைச் செய்தோர் தமது சொந்த விருப்பார்வத்தின் காரணமாகப் பொழுது போக்காகவோ அல்லது ஓய்வு நேர முயற்சியாகவோ நாட்டாரியல் பற்றி யஆய்வுகளில், தொகுப்புக்களில் அது பற்றிய பிரக்ஞை இன்றித் தொழிற்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வகையான ஆய்வு முயற்சிகளே 'நாட்டார் வழக்காற்றியல்' பற்றிய ஈழத்தின் தொடக்க நிலை ஆய்வுகளாக இனங்காணப்பட்டன. ஏறத்தாள 1960கள் வரை இவ்வாறான முயற்சிகளே தொடர்ந்ததெனக் கூறலாம்.

ஈழத்திற்கு வருகை தந்த ஆங்கிலேய மிஷனரிமாரும், ஆங்கிலேய அரசுகளினால் நியமிக்கப்பட்ட துரைத்தன உத்தியோகத்தர்களும் இவ்விருவகைப்பட்ட பிரிவினர்களதும் முயற்சிகளினால் கவரப்பட்ட சுதேசிகளும் இவ்வகையான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டனர். (3) இவர்களால் அவ்வப்போது எழுதிவைக்கப்பட்ட 'குறிப்புக்களே' ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வுகளின் மூலங்கள் எனக் கருதப்பட்டன. பீற்றர் பேர்சிவல், லாஸரஸ், ஜென்சன், டபிள்யூ.எச.கிளார்க், ஜோன் பென்றி லெவிஸ், எச்.ஹோஸ்கி, எச்.நெவில், சைமன்காசிச்செட்டி, கனகசபைப்பிள்ளை, வ.குமாரசாமிப்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், மு.இராமலிங்கம், எம்.டி.இராகவன், குலசபாநாதன் முதலியோர் இவர்களிற் சிலராவர்.

மேலைத் தேசத்தவர்களான மிஷனரிமாகளுக்கும் துரைத்தனத்தாருக்கும் கீழைத்தேசத்தவர்களது வாழ்வியல் நடைமுறைகளைத் தெரிந்து கொள்வதிலிருந்த ஆர்வமும், சமயம் அல்லது நிர்வாகத் தேவைகளுமே இவர்களை இவ்வாறான முயற்சிகளில் இட்டுச் சென்றதாகக் கருதலாம். இவர்களுடைய ஆய்வுப் புலங்களில் பழமொழி, சாதியமைப்பு, நாட்டுப்புற விளையாட்டு, சடங்கு, நாட்டார்பாடல், பழக்க வழக்கங்கள் முதலானவை பிரதான இடம்பிடித்தன. தனிமனித நிலைப்பட்ட இவ்வாறான ஆய்வுகளில் பெரும்பாலானவை 'விவரண' நிலைப்பட்டனவாகவே காணப்பட்டன. 'நாட்டார் வழக்காற்றியல்' தொடர்பான முறையியலில் எந்தவிதமான பயிற்சிகளும் இவர்களுக்கிருந்ததாகச் சொல்ல முடியாது. தொகுத்தல் ஆவணப்படுத்தல் விவரித்தல் இவையே இவர்களது முயற்சிகளுக்கான அடிப்படைகளாகத் தொழிற்பட்டன.

### 3.2 பிரக்ஞை பூர்வமான நிறுவன நிலைப்பட்ட ஆய்வுகள்

பிரக்ஞை பூர்வமான ஆராய்ச்சி முயற்சிகளின் சாயல்கள் ஈழத்தைப்பொறுத்தவரை 1960களின் முன்பின்னாக முளைவிடத் தொடங்குகின்றன. தமிழ் நாட்டிலும் இக்காலப்பகுதியில்தான் 'நாட்டார் வழக்காற்றியல்' கல்விப்புல எல்லைக்குள் வருவதனை அவதானிக்கலாம்.(4) இவ்வகையான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய முறையியல் நுட்பங்களை அறிந்தவர்களாகவும் கல்வி, உயர்கல்வி நிறுவனங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். பேராசிரியர்கள் .க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, கா.இந்திரபாலா, அ.சண்முகதாஸ், இ.பாலசுந்தரம், சி.மௌனகுரு, க.அருணாசலம் (5) கலாநிதிகளான செ.சுந்தரம்பிள்ளை,எம்.ஏ. நுஃமான் முதலியோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பேராசிரியர் க.கைலாசபதியின் முயற்சியினால் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் 'நாட்டார் வழக்காற்றியல்' ஒருபாடமாக உள்வாங்கப் படுவதற்கான அவசியம்

உணர்த்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. இந்நிலையில் பிரக்ஞைபூர்வமான ஆய்வுகள் பலவும் நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படலாயின. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் முதலானவை வாயிலாக இம்முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடாத்திய 'இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல்' கருத்தரங்கு இவ்விடத்தில் விதந்து குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பேராசிரியர். அ.சண்முகதாஸ் குறிப்பிடுவதுபோல, இக் கருத்தரங்கிலேதான் ஈழத்து நாட்டாரியல் பரப்பினை ஓரளவு இனங்காணும் முயற்சியும், இத்துறையின் பல்வேறுபட்ட கூறுகளிலே சிறிதளவிலாவது ஆய்வு செய்கின்ற முயற்சிகளும் முனைப்புப் பெற்றன. (6) இக்கருத்தரங்குக் கட்டுரைகள் பின்னர் பேராசிரியர். கா.சிவத்தம்பியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியீடு செய்யப்பட்டன. இம்முயற்சி இத்துறை குறித்த ஆய்வு முயற்சிகளை புதியதொரு பரிணாமத்திற்கு இட்டுச் சென்றது,

1960களின் பின்பதான நாட்டார் வழக்கியல் ஆய்வு முயற்சிகளை அவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட புலங்களை (Field) அடிப்படையாகக் கொண்டு நோக்குதலே பொருத்தமானதாகும். இவை பெரும்பாலும் பின்வரும் துறைகள் மீதே மேற்கொள்ளப்பட்டன.

3.2.1 நாட்டார்பாடல், நாட்டார் இசை
3.2.2. நாட்டார் அரங்கு
3.2.3 நாட்டார் பண்பாடு
3.2.4 பழமொழி, விடுகதை
3.2.5 இடப்பெயராய்வு

### *3.2.1 நாட்டார்பாடல், இசை*

ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் கூறுகளில் நாட்டார் பாடலே, இத்துறை குறித்த ஆய்வாளர் பலரதும் புலமைச் சிரத்தைக்குரிய கூறாக இருந்து வந்துள்ளதனை அவதானிக்கலாம். நாட்டார் பாடல் பற்றிய ஆய்வு முயற்சிகள் ஏறத்தாள ஐம்பதுகளின் முன்பின்னாக மேற்கொள்ளப்படலாயின. இம் முயற்சிகள் தனிநபர் முயற்சிகளாகவும் நிறுவன முயற்சிகளாகவும் அமைந்தன. இலங்கை சுதந்திரம் அடைந்ததன்பின் மொழி, பண்பாடு, வரலாறு ஆகிய துறைகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இப்பின்னணியில் 1953இல் அரசாங்க உதவியுடன் இலங்கைக் கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் நாடார் பாடல்களைச் சேகரித்து வெளியிடும் பணியை மேற்கொண்டது. சமகாலத்தில் பிரதேச ரீதியான கலாமன்றங்கள் பலவும் நிறுவப்பட்டு மாவட்ட ரீதியாகவும் நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் முயற்சிகளும் முனைப்புப் பெற்றன.

நாட்டார் பாடல் தொடர்பான பல்வேறு தொகுப்புக்களும், கட்டுரைகளும் இக்காலத்தில் வெளிவந்தன. பெரும்பாலும் கட்டுரைகளே அதிகமாக வெளிவந்தன. இவை தினகரன், ஈழகேசரி, ஈழநாடு, வீரகேசரி, சுதந்திரன், சிந்தாமணி முதலான பத்திரிகைகளிலும் இளம்பிறை, ஸ்ரீலங்கா, அஞ்சலி, பூம்பொழில், நுட்பம், வளர்மதி, ஆராய்ச்சி, வெற்றிமணி, கமத்தொழில் விளக்கம், கலைமகள், முதலான கலையிலக்கியச் சஞ்சிகைகளிலும் உலகத் தமிழாராய்ச்சி மற்றும் மட்டக்களப்பு, வன்னி யாழ்ப்பாணம் முதலான பிரதேச ரீதியான தமிழாராய்ச்சி மலர்களிலும் வெளிவந்தன.

இவ்வாறான ஆராய்ச்சி மற்றும் தொகுப்பு முயற்சிகளில் ஈடுபட்டவர்களுள் தி.சதாசிவஐயர், மு.இராமலிங்கம், பேராசிரியர்கள். சு.வித்தியானந்தன், இ.பாலசுந்தரம், அ.சண்முகதாஸ் மற்றும் குல.சாநாதன், எவ்.எக்ஸ்.சி.நடராசா, நவசோதி கணபதிப்பிள்ளை, மெற்றாஸ் மெயில், த.சண்முகசுந்தரம், வீ.சி.கந்தையா, அருள். செல்வநாயகம், சி.வி.வேலுப்பிள்ளை, சாரல் நாடன், கோமஸ், மாத்தளை சோமு, எஸ். முத்துமீரான், ஆ.மு.விரிப்புத்தீன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பேராசிரியர்.சு.வித்தியானந்தன், நாட்டார் பாடல்களைப் பிரதேசரீதியாகப் பதிப்பிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டினார்.[7] அத்துடன் நாட்டார் பாடல்கள் தொடர்பாகப் பல கட்டுரைகளையும் எழுதினார். பேராசிரியர் இ.பாலசுந்தரத்தினுடைய கலாநிதிப்பட்ட ஆய்வான 'மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும்' (1979) என்ற முயற்சி ஈழத்து நாட்டார்பாடல்கள் தொடர்பான ஆய்வுகளில் குறிப்பிட்ட ஒரு பரிணாமத்தை இனங்காட்டுவதாகும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரான திரு.ம.இரகுநாதன் வன்னிப் பிரதேசத்தில் ஏட்டுச்சுவடியாக இருந்த சிலம்பு கூறல் என்னும் காவியத்தை ஆய்வு செய்து முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வுப் பதிப்பாக வெளிக்கொணர்ந்தார். பேராசிரியர்கள், க.கைலாசபதி, அ.சண்முகதாஸ், சு.சுசீந்திரராசா, எம்.ஏ.நு.்.மான் முதலானோர் மொழியியல் சமூகவியற் பின்னணியில் நாட்டார் பாடல்களை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

ஈழத்து நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வுகளில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் க.பொ.த.(சா.த) தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட 'நாட்டார பாடல்கள்' (1976) என்ற தொகுப்பும் அதற்கான முன்னுரையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முயற்சிகளாகும் மேலே குறிப்பிட்ட முயற்சிகளெல்லாம் பல்கலைக்கழக மட்டத்தோடு தொடர்புடையனவாக அமைந்தன.

வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் அவர்களுடைய பணிகள் இவ்விடத்தில் சிறப்பான கவனத்திற்குரியன. இவருடைய நாட்டார் பாடல் தொகுப்புக்களில், இலங்கை நாட்டுப்பாடல்கள் (1957), கிராமக்கவிக்குயில் ஒப்பாரி (1960), வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள் (1961), நாட்டார் பாடல்களில் பாண்டித்தியம் (1971), முதலானவை குறிப்பிடத்தக்கனவாகும். மெற்றாஸ் மெயில் என்பவர் 'வன்னிவள நாட்டார் பாடல்கள்' (1980) என்ற தொகுப்பினை மொழியியல் பாடாந்தரத் திறனாய்வுகளுக்கு அமையப் பதிப்பித்து வெளியிட்டார்.

நாட்டார் இசை தொடர்பாகச் சிலர் கட்டுரைகளை எழுதினர். சுவாமி விபுலானந்தர், பேராசிரியர். க.கைலாசபதி முதலானோர் நாட்டார் இசைமரபுகளை செந்நெறி இசை மரபுகளுடன் பொருத்திப் பார்த்துச் சில கட்டுரைகளை எழுதினர். பேராசிரியர். இ.பாலசுந்தரம் அவர்கள் 'நாட்டார் இசை, இயல்பும் பண்பாடும்' (1991) என்ற நூலை எழுதினார். இந்நூல் இத்துறை குறித்த நுண்ணாய்வாக அமைந்தது.

நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வுகளும், தொகுப்புக்களுமாக வெவ்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு நூல்கள் வெளிவந்தனவாயினும் அவையனைத்தையும் இவ்விடத்தில் பட்டியலிடுவதென்பது இயலாத விடயமாகும்.[8]

### *3.2.2 நாட்டார் அரங்கு பற்றிய ஆய்வுகள்*

ஈழத்து நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு முயற்சிகளை அவதானிக்கும் போது நாட்டார் பாடலுக்கு அடுத்தபடியான ஆய்வு நிலை முக்கியத்துவம் 'நாட்டார் அரங்கைப்' பற்றியதாகவே இருந்து வந்துள்ளதனை அவதானிக்க முடியும். நாட்டார் அரங்கைப் பற்றிய ஆய்வு முயற்சிகள் இரண்டு நிலைகளில் நடைபெற்றன. சிலர் இரண்டு நிலைகளிலும் ஆராய்ந்தார்கள். அவையாவன.

3.2.2.1 இலக்கிய நிலை நின்ற ஆய்வுகள்
3.2.2.2 அரங்க நிலை நின்ற ஆய்வுகள்

#### *3.2.2.1 இலக்கிய நிலை நின்ற ஆய்வுகள்*

நாட்டார் அரங்கைப் பற்றிய ஆரம்பநிலை ஆய்வுகள், விமர்சனங்கள் என்பன பெரும்பாலும் இலக்கிய நிலை நின்ற ஆய்வு முயற்சிகளாகவே காணப்பட்டன. இவ் வகையான ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள் பலராவர். இவர்களில் பெரும்பாலானோர் தத்தமது பிரதேசங்களில் ஆடப்பட்டுவந்த கூத்துக்கள் பற்றி அவ்வப்போது பத்திரிகை களிலும், பருவ இதழ்களிலும் வானொலிக்கும் எழுதி வந்தார்கள். வட இலங்கைக் கூத்துக்கள்

பற்றி வ. குமாரசாமி, எம்.எஸ்.திருவிளங்கம், மு.இராமலிங்கம் முதலானோரும் மன்னார்ப் பிரதேசத்துக் கூத்துக்கள் பற்றி பெஞ்ஜமின் செல்வம், மக்ஸிமஸ்லம்பேட் முதலானோரும், வன்னிக்கூத்துக்கள் பற்றி முல்லைமணி, மெற்றாஸ் மெயில் போன்றோரும் மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றி எவ்.எக்ஸ்.சி.நடராசா, வீ.சி.கந்தையா முதலியோரும், மலையகக் கூத்துக்கள் பற்றி சி.வி.வேலுப்பிள்ளை போன்றோரும் அவ்வப்போது எழுதி வந்தனர். கத்தோலிக்கக் கூத்து மரபு பற்றி சுவாமி ஞானப்பிரகாசர், பாவிலுப்பிள்ளை அடிகளார், தியோகுப்பிள்ளை அடிகளார் முதலானோர் எழுதி வந்தனர். பேராசிரியர்கள் சு.வித்தியானந்தன், இ.பாலசுந்தரம் முதலானோர் சகல பிரதேசத்து நாட்டுக் கூத்து மரபுகள் பற்றியும் ஆய்வுகள் கட்டுரைகள் எழுதினர்.

வ.குமாரசுவாமி என்பவர் 'கதிரமலைப்பள்ளு' என்ற நூலுக்கு எழுதிய பதிப்புரையும், கலையரசு சு.சொர்ணலிங்கத்தின் 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்ற நூலும், க.சொக்கலிங்கத்தின் 'ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி' என்ற நூலும் இவ்வாறான ஆக்கங்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவாகும்.

மேலே குறிப்பிட்ட ஆய்வுகளிற் பெரும்பாலானவை இரசனை முறையில் அமைந்தனவாகக் காணப்பட்டன. இவை பெரும்பாலும் தரவுக் களஞ்சியங்களாகவே தவிர்க்க முடியாதபடி அமைந்தன. ஆயினும் நாட்டார் நிலைப்பட்ட ஆற்றுகைக் கலை குறித்த அரங்கநிலை நின்ற ஆய்வுகளுக்கு இவையே அடிப்படையாகவும் அமைந்தன.

### *3.2.2.2 அரங்க நிலை நின்ற ஆய்வுகள்*

நாட்டார் அரங்கு மீது அரங்கநிலை நின்று ஆய்வு செய்தவர்களுள் பேராசிரியர்கள் சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, இ.பாலசுந்தரம், கலாநிதி.செ. சுத்தரம்பிள்ளை முதலானோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன், 'ஈழத்து நாட்டார் அரங்கு' குறித்த ஆய்வுகளின் முன்னோடிகளில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். சமகாலத்தில் சிங்கள மக்களுடைய நாட்டார் அரங்கு குறித்து ஆராய்ந்தவர்களான பேராசிரியர் சரத்சந்திரா, தம்ஜாகொட முதலானோர்களுடைய முயற்சிகளும், பேராசிரியர்.க. கணபதிப்பிள்ளையினுடைய ஊக்கமும் இவரை இத்துறையில் ஊக்கப்படுத்தின: கூத்து நூல்களைப் பதிப்பித்தமை, அரங்கு குறித்துக் கட்டுரைகளை எழுதியமை[9] கலைக்கழகத் தலைவராக இருந்து அண்ணாவிமார் மாநாடுகளையும், கூத்துப் போட்டிகளையும் நடாத்தியமை, பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு தாமே கூத்துக்களைத் தயாரித்தமை முதலான செயற்பாடுகள் பேராசிரியரது பணிகளில் விதந்து குறிப்பிடக் கூடியனவாகும். நாட்டார் அரங்குமீது இவர் மேற்கொண்ட ஆய்வுகளும், பரிசோதனை முயற்சிகளும் விரிவான தனியான ஆராய்ச்சிக்குரியன.

1960களில் அரங்க நிலைநின்ற ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பேராசிரியர். சி.மௌனகுரு 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களை' ஆராய்ந்து கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். மேலும் நாட்டார் அரங்கு குறித்துப் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார்.[10] கலாநிதி செ.சுந்தரம்பிள்ளை வட இலங்கை நாட்டார் அரங்கு பற்றி ஆராய்ந்து கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். ஈழத்து இசைநாடக வரலாறு (1990), வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996) முதலான நூல்களையும் வெளியிட்டார். இவ்வாய்வுகள் அரங்க நிலைநின்ற ஆய்வுகளை புதிய கோணத்தில் இட்டுச் சென்றன.

இவ்விடத்தில் சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம், தாசீசியஸ் முதலானோர் ஈழத்தின் பாரம்பரிய நாடக வடிமான நாட்டுக்

கூத்துக்களில் செய்த பரிசோதனை முயற்சிகள் பற்றியும் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். பாரம்பரியமான நாட்டார் கூத்து வடிவங்களுக்குள் சமூகத்தில் உக்கிரமடைந்திருக்கும் சமகாலப் பிரச்சினைகளை எடுத்துக் கூறமுனைந்ததன் விளைவாக 'சங்காரம்', 'ஏர்முனை வேலன்', 'போடியார் மாப்பிள்ளை', 'கந்தன் கருணை', 'கோபுரவாசல்', 'இராமாயணம்', 'களத்தில் காத்தான்' முதலான படைப்புக்கள் வெளிக்கொணரப்பட்டன.

பேராசிரியர் சு.வித்தியானந்தனது நாட்டார் அரங்கு பற்றிய முயற்சிகளினால் கவரப்பட்ட பேராசிரியர். கா.சிவத்தம்பி, அரங்கு பற்றிப் பல்வேறுகட்டுரைகளையும் முன்னுரைகளையும், பதிப்புரைகளையும் எழுதினார். இம்முன்னுரைகளும், பதிப்புரைகளும் அளவிற் சிறியனவாயினும் புதிய சிந்தனைகள் பலவற்றைத் தூண்டக் கூடியனவாகவும் இத்துறையின்பால் விரிவான ஆராய்ச்சிகளை ஆற்றுப்படுத்துவனவாகவும் அமைந்தன.(11) எனத் துணிந்து கூறலாம்.

பேராசிரியர். இ.பாலசுந்தரம், நாட்டார் அரங்கு குறித்து கட்டுரைகள் எழுதினார். ஏட்டுப் பிரதிகளிலிருந்த காத்தவராயன் நாடகத்தினை நூலாகப் பதிப்பித்து வெளியிட்டார். பேராசிரியர். சு.வித்தியானந்தன் பாணியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களையம், ஊழியர்களையும் கொண்டு கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து, சத்தியவான் சாவித்திரி முதலான நாடகங்களை மேடை ஏற்றினார். ஈழத்தமிழர்களின் நாட்டார் வழக்காறுகளைப் பேணவென (யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்' என்ற அமைப்பொன்றையும் உருவாக்கிச் செயற்படுத்தினார்.

### 3.2.3 நாட்டார் பண்பாடு பற்றிய ஆய்வுகள்

ஈழத்தமிழர் நாட்டார் பண்பாடு குறித்து முறையான முழுநிலை ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை என்றே கூறலாம். பலரும் நாட்டார் பண்பாட்டின் சிற்சில கூறுகள் மீது கட்டுரைகளை எழுதிவந்தார்கள். இவை தமிழிலும், ஆங்கிலத்திலுமாக எழுதப்பட்டன.(12) மேல் நாட்டவரும், சுதேசிகளும் மேலே குறிப்பிட்ட முயற்சிகளில் ஈடுபட்டனர். சாதிப்பிரிவுகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் முதலானவை ஆரம்பகாலக் கட்டுரைகளின் ஆய்வுப் பொருள்களாக அமைந்தன.

ஈழத்தமிழர்களது நாட்டார் பண்பாட்டியற் கூறுகள் பலவற்றையும் பெருமளவில் பதிவு செய்துள்ள தனி நூல்கள் என்ற வகையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'காதலியாற்றுப்படை' (1950), 'ஈழத்து வாழ்வும் வளமும்', (1962) ஆகிய நூல்கள் சிறப்பிடம் பெறுபவை. அத்துடன் வீ.சி.கந்தையாவினுடைய 'மட்டக்களப்புத் தமிழகம்' (1964), எஃஎக்ஸ்.சி. நடராசாவினுடைய 'மட்டக்களப்புமான்மியம்'(1962), கலாநிதி.திருமதி. ம. சண்முகதாஸ் அவர்களுடைய 'சாதியும் துடக்கும்'(1991) எஸ்.பொன்னுத்துரையினுடைய 'நனவிடைத் தோய்தல்' (1992) மற்றும் கே.டானியல் முதலானோர்களுடைய நாவல்கள் என்பன சிறப்பான கவனத்திற்குரியன.

### 3.2.4 பழமொழி, விடுகதைகள் பற்றிய ஆய்வு

ஈழத்துப் பழமொழிகள், விடுகதைகள் என்பன குறித்த விரிவான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. பலரும் தொகுப்பு முயற்சிகளில் ஆர்வம் காட்டி வந்துள்ளமையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தமிழ் மக்களிடையே வாய்மொழி மரபில் வழங்கி வந்த பழமொழிகள் முதன் முதலில் பேர்சிவல் பாதிரியாரால் தொகுக்கப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்புடன் 1843இல் வெளியிடப்பட்டது. 1888இல் சத்திய நடேசன் என்பவர், 'பழமொழிகளினதும் தொடர்களினதும் கையேடு' என்ற நூலை வெளியிட்டார்.(13) தொடர்ந்து 1894இல் ஜோன் லாசரஸ் என்பவர் 'தமிழ்ப் பழமொழிகளின் அகராதி' என்ற நூலை வெளியிட்டார். 1897இல்

சி.வை.தாமோதரம்பிள்ளையின் முன்னுரையுடன் சேர்மன் ஜேன்சன் என்பவர் தமிழ்ப் பழமொழித் தொகுதி ஒன்றினை வெளிக் கொணர்ந்தார். இப்பதிப்பு பலராலும் விதந்து குறிப்பிடப்பட்டது.

தொகுப்பு முயற்சிகளைத் தொடர்ந்து பழமொழிகளை விளக்குவதும், ஆய்வு செய்வதுமான செயற்பாடுகள் நடைபெறலாயின. மு.இராமலிங்கம், எவ்.எக்ஸ்.சி.நடராசா, என்.செல்வராஜா முதலானோர் இவர்களிற் சிலராவர். மிக அண்மைக் காலத்தில் சச்சிமாஸ்டர், கோப்பாய் சிவம் போன்றோர்[14] பழமொழித் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளனர். ஆ. சிவனேசச்செல்வன், பேராசிரியர் இ.பாலசுந்தரம் முதலானோர் பழமொழிகள் பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் எழுதினர், [15]

விடுகதைகளைப் பொறுத்தவரை மு.இரமலிங்கம் என்பவர் 'களவுக்காதலர் கையாண்ட விடுகதைகள்' (1962), பொது அறிவு விடுகதைகள் (1970) ஆகிய தொகுப்புக்களை வெளியிட்டார். கோப்பாய் சிவம் யாழ்ப்பாணப் பிரதேசத்து விடுகதைகள் சிலவற்றைச் சேகரித்து சிறு சிறு நூல்களாக வெளியிட்டார்.

பழமொழி, விடுகதை பற்றி நாட்டாரியல் சார்ந்த முறையியல் நுட்பத்துடன் ஆராயும் பண்பு ஈழத்தில் இன்னமும் தொடங்கப்படவில்லை.[16] பல்கலைக்கழக மட்டங்களில் தமிழ்ச் சிறப்புக்கலை இறுதியாண்டு தேர்வின் ஒருபகுதியான ஆய்வுக் கட்டுரைக்கு சிலர் இவற்றை எடுத்து ஆராயமுற்பட்டுள்ளனர்.[17] ஆயினும் பேராசிரியர். அ.சண்முகதாஸ் குறிப்பிடுவது போல விடுகதைகளின் அமைப்பு, அவற்றின் பயன்பாடு, கிராமச் சொற்றொடர் வழக்கு ஆகியன பற்றி எவரும் நுண்ணாய்வு செய்ததாகத் தெரியவில்லை.[18]

### *3.2.5 இடப்பெயர் பற்றிய ஆய்வுகள்*

விஞ்ஞானரீதியாக இடப்பெயர்வுகளை ஆராயும் முறை இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆயினும் ஈழத்தில் இத்துறை குறித்த ஆய்வுகள் பெரிதும் முனைப்படையவில்லை என்றே கூலாம். சைமன் காசிச்செட்டி, சுவாமி ஞானப்பிரகாசர், எஸ்.டபிள்யூ. குமாரசாமி, ஹோர்ஸ் பேர்க், எஸ்.சபாரத்தின முதலியார் முதலானோர் இத்துறை ஆய்வின் முன்னோடிகளாக உள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏறத்தாள ஐம்பது ஆண்டுகளின் பின்பு இத்துறை குறித்த மேலும் சில நூல்கள் வெளிவந்தன. இவற்றை ஆங்கிலேய அரச அதிகாரிகளும், நீதிபதிகளும் சுதேசிகளும் எழுதினர்.

மேலே குறிப்பிட்ட முயற்சிகளில் இடப்பெயராய்வின் நெறிமுறைகளான ஊர்ப் பெயர்களைத் தொகுத்தல், செய்திகளைச் சேகரித்தல், அடையாளம் காணுதல், விளக்குதல், வெளியிடுதல்[19] பண்புகளை இனங்காணமுடியவில்லை. பேராசிரியர் இ.பாலசுந்தரம், வடமராட்சி, தென்மராட்சி, காங்கேசன் கல்வி வட்டாரத்து இடப்பெயர்களை முறையாக ஆராயந்து நூல்களாக வெளியிட்டார். இம்முயற்சிகளில் பேராசிரியர். இ.பாலசுந்தரம் அவர்கள் கையாண்ட நெறிமுறைகள் குறித்து இந்நூல் களிலொன்றுக்கு எழுதிய மதிப்புரையில் பேராசிரியர். ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிட்டுச் சொல்கிறார்.(20) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்கி யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய இடப்பெயர்கள் குறித்தும் இவர் ஆராய்ந்தாராயினும் அவை இன்னமும் அச்சேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கு. பகவதி என்பவரும் இலங்கை இடப்பெயர்கள் சிலபற்றி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்தார். இவையே ஈழத்து இடப்பெயராய்வு குறித்த இன்றைய நிலையாகும்.

## மதிப்பீடு

ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக இதுவரை வெளிவந்த தொகுப்புக்களையும் ஆய்வுகளையும் நோக்குமிடத்து தொகுப்பாளர்களதும், ஆய்வாளர்களதும் புலமைச் சிரத்தை என்பது வாய்மொழி இலக்கியம் (Verbal Art) மேலேயே அதிகமாக ஈர்க்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம். அதிலும் நாட்டார் கதைகள், பழமொழி, விடுகதை, மொழிவழக்குகள் முதலானவற்றின் மீதான ஆய்வுகள் இல்லை என்று சொல்லுமளவிற்கு அருந்தலாக வேயுள்ளன. பழமைபோற்றும் பண்பும், விவரணத்தன்மைகளும் இவ்வகையான ஆய்வுகளின் பிரதான குறைபாடுகளாக உள்ளன.

வாய்மொழி இலக்கியத்தின் ஒரு கூறாகிய நாட்டார் பாடல்கள் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட தொகுப்புக்கள், அவை தொகுக்கப்பட்ட நிலையிலும் பதிப்பிக்கப்பட்ட நிலையிலும் பல்வேறு குறைபாடுகளை உடையனவாக உள்ளமை பற்றியும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். மெற்றாஸ் மெயிலினுடைய 'வன்னிவள நாட்டார் பாடல்கள்' என்ற தொகுப்பு இவற்றிற்குப் புறநடையாக உள்ளது. ஆய்வுகள் என்ற நிலையில் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்களின் 'ஈழத்து நாட்டார் பாடல்கள்' (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும் என்ற முயற்சி அமைப்பியல் ஆய்வு முறையினை உள்வாங்கிய நிலையில் ஈழத்து நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றது.(21)

இலங்கையில் நாட்டாரியலைத் தமிழ் இலக்கியக் கல்வியின் ஒரு பகுதியாகக் கற்பிக்கும் நிலை தொடர்வதானது வாய்மொழி இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இங்கு நடைபெறும் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வுகளை, வழக்கங்கள் சார்ந்த நாட்டார் வழக்காறுகள் (Customary Folklore) மற்றும் பொருள்சார் நாட்டார் மரபுகள் (Material Folk traditions) முதலான கூறுகள் மீதும் திருப்பிவிட வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து மக்களுடைய வழக்காறுகளை மட்டுமே முனைப்புறுத்தி ஆராயும் நிலை விஸ்தரிக்கப்பட்டு ஈழத்தில் தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மலையகம் மற்றும் முஸ்லீம்கள் செறிந்து வாழுமிடங்களான திக்குவலை, மினுவாங்கொடை, பொலநறுவை, அனுராதபுரம், முதலான பகுதிகளிலுள்ள மக்களுடைய வழக்காறுகள் மீதும் ஆய்வுகள் செய்யப்படும் போதே ஈழத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் முழுமைபெறும்.

நாட்டார் வழக்கியற் கூறுகளை மானிடவியல், சமூகவியல், உளவியல், வரலாறு, மொழியியல் முதலான பிற துறைகளுடன் இணைத்து ஆய்வு செய்கின்ற தன்மை (Inter diciplinary study) ஈழத்தில் குறைவாகவேயுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் (22) என்.சண்முகலிங்கன்(23) முதலானோர் இத்துறையின் சில கூறுகளை முறையே மொழியியல், சமூகவியல் பின்னணியில் ஆராய்ந்துள்ளனர்.

நாட்டாரியலை தனித்ததொரு ஆய்வுத் துறையாக உருவாக்கி வளர்க்க வேண்டியது ஈழத்தைப் பொறுத்தவரை அவசரமானதும், அவசியமானதுமான நடவடிக்கையாக உள்ளது.

***அடிக்குறிப்புக்கள்***

01. மரியாலீச், ஜோனாஸ்பாலிஸ், வில்லியம்பாஸ்கம், பி.ஏ.போட்சின் ஸ்ரீபன் பியூக்ஸ் முதலானோர் இவர்களிற் சிலராவர்.
02. Dundes, Alan (1965), The Study of Folklore New Jersy: Englewood Cliff: Prentice Hall, P.3.
03. கைலாசபதி.க, (1980) இலங்கையில் தமிழ்நாட்டார் வழக்கியல் ஆய்வுகள் வந்தவையும் வரவேண்டியவையும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், பக். 3-4
04. லூர்து.எஸ்.டி, (1995), நாட்டார் வழக்காற்றுக் கோட்பாடுகளும் அணுகுமுறைகளும், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், ப.2.
05. பேராசிரியர்.க.அருணாசலம், மலையகத் தமிழ் இலக்கியம், (1994) என்ற நூலிலே மலையகத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பற்றி ஆராய்ந்துள்ளார்.
06. சண்முகதாஸ்.அ,(1995), ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியற்பரப்பும் அதில் நுண்ணாய்வுக்குட்பட வேண்டிய கூறுகளும், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், பக்.218-219
07 மன்னார் நாட்டுப்பாடல்கள் (1964), மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் (1962) ஆகிய இருநூல்களை வெளியிட்டார்.
08.

| | | |
|---|---|---|
| சதாசிவஐயர்.தி, | (1940), | மட்டக்களப்பு வந்தன் கவித்திரட்டு |
| நடராசா.எவ்.எக்ஸ்.சி. | (1965) | கண்ணகி வழக்குரை |
| ...................................... | (1960) | எண்ணெய்ச்சிந்து |
| ...................................... | (1962) | ஈழத்து நாடோடிப் பாடல்கள். |
| செல்லையா.மா.செ | (1962) | கோவலனார் கதை |
| செல்வராஜகோபால்.க.த. | (1970) | கபோதகாதை |
| கந்தையா.வீ.சி | (1958) | கண்ணகை அம்மன் குளிர்த்திப்பாடல்கள் |
| ...................................... | (1968) | கண்ணகி வழக்குரை |
| மாறன் விதானை | (1966) | இரணிய சமீகார அம்மானை |
| சண்முகசுந்தரம்,த | (1988) | தாய்தரும் தாலாட்டு |
| ...................................... | (1984) | நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப் பாடல் |
| ...................................... | (1983) | குருவிச்சி நாய்ச்சி சலிப்பு வளர்ப்புத் தாய் புலம்பல் |
| வேலுப்பிள்ளை சி.வி. | (1983) | மலைநாட்டு மக்கள் பாடல்கள் |
| புஸ்பராஜன் | (1976) | அம்பாப்பாடல்கள் |
| முத்துமீரான்.எஸ் | (1991) | கிராமியக் கவியமுதம் |
| கோமஸ்.ஏ.பி.வி | (1988) | அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான் |

09. ஈழத்தமிழர் நாட்டார் அரங்கு குறித்த பேராசிரியர். சு.வித்தியானந்தனுடைய கட்டுரைகள் பலவும் பின்னர் ஒருங்கு சேர்க்கப்பட்டு 'நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள்' (1990) என்ற நூலாக வெளிவந்தது.

அலங்காரரூபன் நாடகம் (1964), மூவிராசாக்கள் நாடகம்(1966) ஞானசௌந்தரி, (1967) முதலான கூத்து நூல்களைப் பதிப்பித்தார்.

10. சி.மௌனகுருவின் நூல்களிற் சில வருமாறு.
பழையதும் புதியதும் (1992)
சடங்கிலிருந்து நாடகம் வரை(1988)
ஈழத்துத்தமிழ் நாடக அரங்கு (1993)
11. மார்க்கண்டன் வாளபிமன் நாடகம் (1963) என்ற நூலைப் பதிப்பித்தார்.
பார்க்க: முன்னுரைகள்.
செ.சுந்தரம்பிள்ளையின் ஈழத்து இசைநாடக வரலாறு, (1990)
சி.மௌனகுருவின் பழையதும் புதியதும் (1992)

12. ஆங்கிலக்கட்டுரைகள் வெளிவந்த இதழ்களிற் சில வருமாறு

01. Ceylon Literary Register
02. Tamil Culture
03. Ceylon Antiquary and Literary Register
04. Social Compass
05. Hindu Dharmam
06. Orientalist
07. Young Ceylon
08. Anthropologial quarterly
09. The Ceylon Gazetteer
10. Taprobanian

தமிழ்க்கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகள், இதழ்களிற் சில

1. அனைத்துலக மற்றும் பிரதேசரீதியான தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்கள்
2. தினகரன்
3. சிந்தாமணி
4. வீரகேசரி
5. ஸ்ரீலங்கா
6. நுட்பம்
7. கலைவாணி
8. இந்துதர்மம்
9. சரஸ்வதி.

13. சிவனேசச்செல்வன்.ஆ. (1980) சிந்தனைத்திறனையும் பண்பாட்டுக் கூறுகளையும் தெரிவிக்கும் பழமொழிகளும் விடுகதைகளும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், ப.348
14. செல்வராஜா.என். (1988) உருமாறும் பழமொழிகள்
சச்சிமாஸ்டர், (1988) மக்கள் வாழ்விற் பழமொழிகள்
15. சிவனேசச்செல்வன்.ஆ. (1980) சிந்தனைத்திறனையும் பண்பாட்டுக் கூறுகளையும் தெரிவிக்கும் பழமொழிகளும் விடுகதைகளும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல். பக்.341-361

பாலசுந்தரம்.இ, (1976) பழமொழி இலக்கியம்- ஓர் அறிமுகம் இளந்தென்றல், பக்.55-60

16. சண்முகதாஸ்.அ (1995) ஈழத்துத்தமிழ் நாட்டார் வழக்கியற்பரப்பும் அதில் நுண்ணாய்வுக்குட்பட வேண்டிய கூறுகளும், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், பக்.227-230
17. செல்வி.ஞானாம்பிகை என்பவர் மலையகப் பழமொழிகள் பற்றி ஆராய்ந்ததாகப் பேராசிரியர். க.அருணாசலம், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997) என்ற நூலில் குறிப்பிடுவர். பக்.160.
18. சண்முகதாஸ். அ, (1995) மு.கு.கட்டுரை. ப.227
19. பகவதி.கு, (1995) ஆய்வுச்சிக்கல்களும் தீர்வுகளும், ஊர்ப்பெயராய்வு ப.30.
20. பாலசுந்தரம்.இ. (1989) இலங்கை இடப்பெயராய்வு -2 பக் I-VIII
21. அருணாசலம். க. (1997) இலங்கையில் தமிழியல் ஆய்வுமுயற்சிகள். ப.155
22. சண்முகதாஸ்.அ, (1980), ஈழத்து நாட்டார் பாடல்களின் மொழியமைப்பு. இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், பக்.304-337.
23. சண்முகலிங்கன். என். (1997), 'A New Face of Durga' Religious and social change in Presentday Jaffna.